***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 21/2012**

P.W.1 திரு.அன்வர்பாட்ஷா த/பெ.அல்லாபிச்சை
நாள் – 14.11.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**1, 21, 22 பிதிரவாதிகள் தரப்பு குறுக்கு தொடர்ச்சி விசாரணை :–**

என் தாயார் பெயர் சேகுபீவி அம்மாள் என்றால் சரிதான். என் சகோதரி பெயர் ஐநூர் மர்ஜான் ஆகும் . நானும், 1–ம் பிரதிவாதியும், என் தாயாரும், என் சகோதரியும் 1997 பிப்ரவரி 27ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல . நாங்கள் அவ்வாறு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும் , ஆனால் அதனை பதிவு செய்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல . எங்கள் குடும்பத்தில் சொத்து பாகப்பிரிவினை சம்மந்தமாக வாய்மொழி பேச்சு வார்த்தை ஏற்பட்டு பின்னிட்டு தான் அவ்வாறு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல . 1997 பாகப்பிரிவினை அடிப்படையில் தான் எனக்கு கிடைத்த சொத்துக்களை வெளிநர்பகுக்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல . அவ்வாறு விற்பனை செய்துவிட்டு தற்போது பொய்யாக 1–ம் பிரதிவாதி பாக சொத்தை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . சம்சுதீன், அப்துல் குத்தூஸ், முகமது யாகியா, அப்துல் லத்தீப் ஆகியோர்கள் எங்கள் ஊர்க்காரர்கள் தான், உறவினர்கள் தான். மேற்படி நபர்கள் இருந்து தான் 1997ம் வருடம் எனக்கும் , என் சகோதர சகோதரிக்கும் இடையே சொத்துக்களை பாக்பிரிவினை செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல .

என் தகப்பனார் அல்லபிச்சை ராவுத்தர் 1938ல் இருந்து 1984 வரை மலேசியாவில் தொழில் நடத்தி வந்தார் . நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், இரண்டாம் உலகப்போரின்போது மலேசியாவில் இருந்து உயிர்பிழைப்பதற்காக எல்லோரும் இந்தியாவிற்கு வந்துவிட்டார்கள் என்றால் சாட்சி அப்போதும் என் தகப்பனார் மலேசியாவில்தான் இருந்தார் என்று பதில் அளிக்கிறார் . நான் மலேசியாவில் தங்கியிருக்கவில்லை, ஆனால் அடிக்கடி மலேசியாவிற்கு போய் வந்தது உண்டு. 1–ம் பிரதிவாதி அப்துல் காதர் அவருக்கு 7 வயதாக இருக்கும்போதே, அதாவது 1946 முதல் 1996 மலேசியாவில் இருந்து வந்தார். நான் அந்த காலக்கட்டத்தில் இருந்தியாவில் இருந்து விவசாயம் பார்த்து வந்தேன் , Business எதுவும் எனக்கு இல்லை . வழக்கு அ – அட்டவணை சொத்துக்களை பொறுத்து எனக்கும் , 1–ம் பிரதிவாதிக்கும் ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்பாகவே என் தகப்பனார் அல்லாபிச்சைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகவே இருந்தது என்றால் சாட்சி சரிதான், என் அப்பா பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று பதில் அளிக்கிறார் . வழ்க்கு அ –அட்டவணை சொத்துக்களை தவிர எனக்கென்று தனியாக வேறு சொத்துக்களும் இருக்கிறது என்றால் சரியல்ல. அத்தகைய எனக்கென்று தனியாக உள்ள வேறு சொத்துக்கள் எனக்கு பாகத்திற்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். கிராமத்தில் ஒரு மர மில் வைத்துள்ளேன் என்றால் சரிதான். மர மில் உள்ள சொத்து எனக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மர மில் சொத்து என் தகப்பனார் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து ஆகும். மலேசியாவிற்கு 1–ம் பிரதிவாதி சென்றபோது எனக்கு வயது ஆகிவிட்டதால் என் தகப்பனார் இந்த மர மில் உள்ள

சொத்தை வைத்து என்னை தொழில் செய்துகொள்ளும்படி எனக்கு இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதிகொடுத்துவிட்டார் என்று சாட்சி பதில் அளிக்கிறார் . அந்த இனாம்செட்டில்மென்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் , வழக்குரையிலும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். நான் பல உண்மைகளை மறைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . இந்துக்களுக்கு சொத்துக்கள் சம்மந்தமாக பாகப்பிரிவினை சட்டமும் , இஸ்லாமியர்களுக்கு சொத்துக்கள் சம்மந்தமாக பாகப்பிரிவினை சட்டமும் வெவ்வேறானது என்றால் சாட்சி தெரியாது என்று பதில் அளிக்கிறார் . இஸ்லாமிய சமயத்தை சார்ந்த நான் இந்து வாரிசுரிமை சட்டத்தை அனுசரித்து பொய்யாக இதுபோன்ற ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மர மில் உள்ள சொத்திற்கு பின்னால் 6 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றாலும், அதனையும் நான் மறைத்துவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*